வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 27.4.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

தீவிரவாதத்திற்கு எதிரான போரில் நாட்டு மக்களின் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் மிகப் பெரிய பலமாக விளங்குகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளாக பொறுப்பேற்றுள்ள புதுச்சேரி சட்டக் கல்லூரியின் முன்னாள் மாணவர்களை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன் பாராட்டி கவுரவித்தார்.

புதுச்சேரியில் பள்ளிகளுக்கு நாளை முதல் கோடை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் 216 ரன் என்னும் வெற்றி இலக்கை லக்னோ அணிக்கு மும்பை அணி நிர்ணயித்துள்ளது.

பிரதமரின்-மனதின் குரல்

தீவிரவாதத்திற்கு எதிரான போரில் நாட்டு மக்களின் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் மிகப் பெரிய பலமாக விளங்குகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி, தெரிவித்துள்ளார்.

இன்று காலை ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் தொலைகாட்சியில் தமது 121-ஆவது மனதின் குரல் உரையின் போது இவ்வாறு தெரிவித்த பிரதமர், இம்மாதம் 22-ஆம் தேதியன்று காஷ்மீர் பஹல்காமில் சுற்றுலா பயணிகள் மீது நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல் நாட்டு மக்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தி இருப்பதாக

குறிப்பிட்டார். இந்த தீவிரவாத செயலில் ஈடுபட்ட குற்றவாளிகள் மற்றும் சதிகாரர்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். ஜம்மு-காஷ்மீரில் அமைதி திரும்பி ஜனநாயகம் வலுவாகி, அங்கே சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பதை இந்தியாவின் எதிரிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்றும் பிரதமர் குறிப்பிட்டார். இத்தகைய தீவிரவாத தாக்குதலை, நாட்டின் 140 கோடி மக்களும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பதே தம் நாட்டின் மிக் பெரிய பலம் என்று பிரதமர் குறிப்பிட்டார். பிரதமர் தமது உரையில் மேலும் கூறுகையில்...............

(வாய்ஸ்)

*பிரதமரின்-மனதின் குரல்*

2 தினங்களுக்கு முன்பு காலமான புகழ்பெற்ற விண்வெளி விஞ்ஞானி டாக்டர் கஸ்தூரி ரங்கனின் மறைவிற்கு பிரதமர் தமது மனதின் குரல் உரையின் போது அஞ்சலி செலுத்தி, விஞ்ஞானம், கல்வி, புதிய தேசிய கல்விக் கொள்கை உள்ளிட்டவற்றில், டாக்டர் கஸ்தூரி ரங்கனின் பங்களிப்பை நினைவு கூர்ந்தார்.

கடந்த மாதம் மியான்மரில் ஏற்பட்ட நிலநடுக்கம் பற்றியும், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மியான்மர் மக்களுக்கு உதவ இந்தியா சார்பில் அனுப்பப்பட்ட விமானம் மற்றும் கப்பல் படையினர் மேற்கொண்ட ஆபரேஷன் பிரம்மா மீட்பு நடவடிக்கைகள் பற்றியும் பிரதமர் மனதின் குரல் உரையில் குறிப்பிட்டார். இதுபோன்ற பேரிடர் காலங்களில் நாம் எச்சரிக்கையுடனும், விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார். அத்தகைய இயற்கை அல்லது செயற்கை பேரிடர் காலங்களில் நாம் நம்மை பாதுகாத்துக் கொள்ள சச்சேத் என்னும் செயலியை தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் உருவாக்கி இருப்பதாகவும், வெள்ளம், சூறாவளி, நிலச்சரிவு, ஆழிப் பேரலை, காட்டுத் தீ, பனிச்சரிவு, உள்ளிட்ட பேரிடர் காலங்களில் நமக்கு

தேவையான அனைத்து தகவல்களையும் அளித்து பாதுகாக்கும் வகையில் இந்த சச்சேத் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

*பிரதமரின்-மனதின் குரல்*

ஆப்பிரிக்காவின் எத்தியோப்பிய நாட்டில், பிறந்தது முதல், இதய நோயால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க பொருளாதார ரீதியில் உதவும் அந்நாட்டு வாழ் இந்தியர்களுக்கு தமது பாராட்டினை மனதின் குரல் உரையின் போது பிரதமர் தெரிவித்தார். மேலும் ஆப்கானிஸ்தான் மக்களுக்கு இந்தியா சார்பில் அனுப்பப்படும் வெறிநாய்க்கடி, டெட்டனஸ், ஈரல் அழற்சி போன்ற நோய்களுக்கான தடுப்பூசிகள் குறித்தும் பிரதமர் குறிப்பிட்டார்.

வரும் ஜூன் மாதம் 5-ஆம் தேதி, உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்பட இருப்பதாகவும், அன்றைய தினம், இந்தியாவில், தாயின் பெயரில் ஒரு மரம் என்னும் இயக்கம் துவக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைய இருப்பதை, பிரதமர் நினைவு கூர்ந்தார். இந்த ஓராண்டில் இந்த இயக்கத்தின் கீழ் நாடெங்கிலும் 140 கோடிக்கும் அதிகமான மரங்கள் நடப்பட்டு இருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

*முர்மு*

போப் பிரான்சிஸ் இறுதி அஞ்சலியில் கலந்து கொண்ட குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, புதுடெல்லி திரும்பினார். வாட்டிகன் நகரத்தின் புனித பீட்டர்ஸ் பேராலயத்தில், மறைந்த, போப் ஆண்டவர் பிரான்சிசின் நல்லடக்கம் நேற்று நடைபெற்றது. இதில் இந்தியாவின் சார்பில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு-வுடன், நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு, சிறுபான்மை விவகாரங்கள் துறை இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் மற்றும் கோவா சட்டப் பேரவையின் துணைத் தலைவர் திரு ஜோஷ்வா டி சூசா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*கஸ்தூரி ரங்கன்*

புகழ்பெற்ற விண்வெளி விஞ்ஞானியும், இஸ்ரோ அமைப்பின் முன்னாள் தலைவரும், புதிய தேசிய கல்விக் கொள்கையின் வடிவமைப்பாளர்களின் ஒருவரான டாக்டர் கிருஷ்ணசாமி கஸ்தூரி ரங்கனின் இறுதிச் சடங்குகள் இன்று மதியம் பெங்களுருவில் நடைபெற்றது. 84 வயதான டாக்டர் கஸ்தூரி ரங்கன் கடந்த வெள்ளிக்கிழமை பெங்களுருவில் காலமானார். பெங்களுரு ராமன் ஆராய்ச்சி நிறுவனத்தில் அன்னாரது உடல் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இருந்தது. கர்நாடக மாநில ஆளுநர் திரு தாவர் சந்த் கெலாட், முதலமைச்சர் திரு சித்த ராமையா, இஸ்ரோ தலைவர் திரு வி நாராயணன் உள்ளிட்டோர், டாக்டர் கஸ்தூரி ரங்கன் உடலுக்கு இன்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

*நீதிபதிகள்- பாராட்டுவிழா*

சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளாக பொறுப்பேற்றுள்ளவர்களுக்கு புதுச்சேரியில் பாராட்டு விழா நடைபெற்றது.

புதுச்சேரி சட்டக் கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகளாக பொறுப்பேற்றுக் கொண்டனர். புதுச்சேரி வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. புதுச்சேரி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் இன்று காலை நடைபெற்ற இந்த பாராட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்து கொண்டு நீதி அரசர்களுக்கு நினைவு பரிசு வழங்கி கவுரவித்தார். முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம், உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், சட்டத் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள், புதுச்சேரி தலைமை நீதிபதி திரு ஆனந்த், வழக்கறிஞர் சங்கத் தலைவர்

திரு சி டி ரமேஷ், மற்றும் ஏராளமான வழக்கறிஞர்கள் இந்த பாராட்டு விழாவில் கலந்து கொண்டனர்.

*பள்ளிகள்-விடுமுறை*

புதுச்சேரியில் பள்ளிகளுக்கு நாளை முதல் ஜூன் ஒன்றாம் தேதி வரை கோடை விடுமுறை அளிக்கப்படுவதாக கல்வித் துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் தெரிவித்துள்ளார். இதுகுறித்த செய்தி தொகுப்பு

(வாய்ஸ்)

*போலி செய்தி*

இந்திய ராணுவத்தை நவீன மயமாக்கும் நோக்கில், அரசு ஒரு வங்கி கணக்கை துவக்கி இருப்பதாக வாட்ஸ்-ஆப் மற்றும் சமூக ஊடக தளங்களில் பரவி வரும் செய்தி தவறாக வழிநடத்துவது ஆகும் என்று அரசு தெரிவித்துள்ளது. இதுபற்றி செய்தி வெளியிட்டுள்ள, பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை கண்டறியும் பிரிவு, இது போலியான செய்தி என்று, தெரிவித்துள்ளது. ராணுவ நடவடிக்கைகளின் போது உயிர் தியாகம் செய்த மற்றும் காயமடைந்த வீரர்களின் குடும்பத்தினருக்கு உடனடியாக பொருளாதார அடிப்படையில் உதவும் நோக்கில் **ஆயுதப் படையினர் போர் உயிரிழப்பு நல்வாழ்வு நிதி** ஒன்றை அரசு உருவாக்கி இருப்பதாகவும், இந்த நிதி போரில் காயமடைந்த மற்றும் உயிரிழந்த வீரர்களின் குடும்பத்தினரின் நல்வாழ்வுக்காக உருவாக்கப்பட்டுள்ளது என்றும், இந்த நிதி நவீனமயமாக்கல் அல்லது தளவாடங்கள் வாங்குவதற்கானது அல்ல என்றும் பத்திரிக்கை தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

*கிரிக்கெட்*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று மதியம் 3.30 மணிக்கு மும்பையில் துவங்கி நடைபெற்று வரும் ஆட்டத்தில், முதலில் ஆடிய மும்பை அணி, 216 - ரன் என்னும் வெற்றி இலக்கை லக்னோ அணிக்கு நிர்ணயித்துள்ளது.

டெல்லி மற்றும் பெங்களுரு அணிகளுக்கு இடையேயான மற்றொரு போட்டி இன்று இரவு 7.30 மணிக்கு டெல்லியில் நடைபெற உள்ளது.

*வானிலை*

தென்னிந்தியப் பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சிப் பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுவதாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால், இன்றும், நாளையும் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுவை-காரைக்கால் பகுதிகளின் சில இடங்களில் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*அன்சாரி துரைசாமி*

தியாகி அன்சாரி துரைசாமியின் நினைவு நாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. மகாத்மாகாந்தி வீதி, சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம், அமைச்சர்கள், திரு லட்சுமி நாராயணன், திரு சாய் ஜெ சரவணன் குமார், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, அரியாங்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி உள்ளிட்டோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

தீவிரவாதத்திற்கு எதிரான போரில் நாட்டு மக்களின் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் மிகப் பெரிய பலமாக விளங்குகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளாக பொறுப்பேற்றுள்ள புதுச்சேரி சட்டக் கல்லூரியின் முன்னாள் மாணவர்களை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன் பாராட்டி கவுரவித்தார்.

புதுச்சேரியில் பள்ளிகளுக்கு நாளை முதல் கோடை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

ஐபிஎல் கிரிக்கெட் தொடரில்  216 ரன் என்னும் வெற்றி இலக்கை லக்னோ அணிக்கு மும்பை அணி நிர்ணயித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 27.4.2025/Script.

----------------------------------